18 நவம்பர் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 33ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்



மாதாந்திர கருப்பொருள்:

**கிறிஸ்துவில் புனிதராவதற்கான அழைப்பு**

# சொன்னதை செய்வது

“வாழ்க்கை என்பது டொய்லட் பேப்பர் மாதிரி, முடியும் போது வேகமாக உருளும்” என்ற ஆங்கில முதுமொழி உண்டு. நாம் கவனியாத சமயத்தில், நாமே நினையாத சமயத்தில், வாழ்க்கை கடந்து போய் விட்டது என நமது வாழ்வில் உணரும் வேளையை இந்த முதுமொழியோடு ஒப்பிடலாம். உங்கள் பட்டமளிப்பு விழா, வேலையின் முதல் நாள், உங்கள் கல்யாண நாள், உங்கள் முதல் குழந்தையை கையில் ஏந்திய நாள், பள்ளிக்கூடத்திற்கு சென்ற முதல் நாள்

போன்ற இதர சில சம்பவங்கள் உங்கள் உள்ளத்தில் பசுமையாக இருக்கும். உங்கள் மனைவி/கணவன், குடும்ப உறுப்பினர்கள் அல்லது நண்பர்கள் உடன் நடத்திய எண்ணற்ற வாக்குவாதங்கள் போனற் கசப்பான தருணங்களும் உண்டு.

காலங்கள் மாறுகின்றன, நாமும் மாறி விட்டோம். சக்கரம் போல் நமது வாழ்க்கை சுற்றிக் கொண்டே இருக்கிறது. அந்த பயணத்தில் ஒருசில அழகான, மகிழ்ச்சியான தருணங்கள் நமது நினைவில் நீங்கா இடம் பிடித்துள்ளன. சில தருணங்கள் கஷ்டமானதாக இருந்திருக்கின்றன. பெரும்பாலான சமயத்தில் தனியாகவும் சில வேளையில் நல்லத்தொரு சகாவோடு இந்த பயணம் அமைந்திருக்கும். அந்த சகா நமது பெற்றோர், தாத்தா-பாட்டி, உறவினர் அல்லது நமது நண்பர்களாக இருந்திருக்கலாம். நீங்கள் சொல்வதற்கு முன்பே உங்களது வாழ்க்கை அடுத்தக் கட்ட நிலை என்ன என்பதை அறிந்திருக்கு உற்றச் சகா இருக்கலாம்.

> **கடவுள் நம்மோடு பயணிக்கிறார் என்ற உணர்வு மிஞ்சி நிற்கும்.**
>
> - புனித அவிலா திரேசா

நமது மகிழச்சி, வேதனை, பாசம், ஏமாற்றம் போன்ற எல்லா நிலையும் வாழ்க்கையில் நிரந்திரமல்ல. வேறுசிலரைக் காட்டிலும் சில உணர்ச்சிப்பூர்வமாக நிலைகள் நம்மோடு அதிக காலம் இருந்திருக்கலாம். சிலவற்றை நாம் பற்றிக் கொள்வதால், வேதனைத் தரும். கடந்த காலத்தை மாற்றி அமைக்கவும் முடியாது, பின்நோக்கி செல்லவும் முடியாது. ஆயினும், இவற்றிலிருந்து நாம் பாடம் கற்றுக் கொள்கிறோம். அவை நம்மை சாதகமான அல்லது பாதகமான பாதிப்பைக் கொண்டு வரலாம். நாம் தேர்ந்தெடுத்தப் பயணம் அது.

வாழ்க்கைப் பயணம் பற்றிப் பேசும் போது இயேசு நமக்கு உறுதிமொழி வழங்குகிறார், பயணத்தில் செய்யும் காரியங்கள், முடிவை நிர்ணயிக்கும். வாழ்க்கையில் நாம் செய்யும முடிவுகள், நமது இறுதி இலக்கை நிர்ணயம் செய்யும். நாம் அவரோடு அல்லது அவரில்லாமல் இருப்போமா என்பதை. ஆனால் நமக்கு அவர் கொடுக்கும் வாக்குறுதி, நமது வாழ்க்கைப் பாதையில் நம்மோடு இருப்பார், நம்மோடு நடப்பார். நம் மீது கடவுள் கொண்டுள்ள அன்பு நிரந்திரமானது என்பதால் இந்த வாக்குறுதி மாறாது. **அனைத்தும் மாறும் அவரது அன்பு மாறாது.**

அவரோடு நடக்க ஒப்புக்கொண்டால், வழி தவறியவர்களையும் எளியவர்களையும் கடையர்களையும் இட்டுச் செல்லும் பாதையை அவர் காட்டுவார். அந்த பாதை நித்திய வாழ்வை சுதந்திரத்துக் கொள்ளும் பாதை, இயேசுவைப் போல் மற்றவர்களுக்கு உயிர் தியாகம் செய்யும் பாதை. உலகம் ஒரு நாள் அழியும், நாம் தனியாக நடப்பதில்லை என்பதால் அது பற்றி நாம் கவலைக் கொள்ளத் தேவையில்லை. ✝

**வாரம் ஒரு வசனம்**

**அனைத்தும் மாறும் அவரது அன்பு மாறாது.**

INTERNAL CIRCULATION ONLY
BUL 46/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிரம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 நவம்பர் (கார்த்திகை) மாதத்தின் கருப்பொருள்:*
***கிறிஸ்துவில் புனிதத்துவத்துக்கு அழைப்பு***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** பொதுக்காலம் 33ஆம் ஞயிறு **சனி 17-11-2018 - ஞாயிறு 25-11-2018**

தானி : 12: 1 - 3 தி.பா: 15: 5, 8 9-10, 11 எபிரேயர்: 10: 11-14, 18 மாற்கு: 13: 24 - 32

**"இறைவா, என்னைக் காத்தருளும், உம்மிடம் அடைக்கலம் புகுந்துள்ளேன்" - திபா 15**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 17 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித ஸ்டெனிஸ்லஸ்) | **எஸ். பி. எம் விவிலியக் கல்வி (SPM Bible Knowledge) :**<br>மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 18 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (புனித அந்தோணியார்)<br>திருப்பலி (ஆ) (புனித பிரான்சிஸ்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |
| திங்கள் | 19 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 20 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 21 | காலை திருப்பலி நடைபெறாது | | குருக்களின் மாதாந்திர தியானம் APC K.L<br>*மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) வேளாங்கண்ணி சிற்றாலயம் - காடோங்* |
| வியா | 22 | 6.45 கா | திருப்பலி | *மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) திரு இருதய ஆண்டவர் சிற்றாலயம் - மார்ஜெரி* |
| வெள் | 23 | 6.45 கா | திருப்பலி | **வேற்றுமையில் ஒற்றுமை** - மாலை 6.30 -இரவு 10.00 வரை, சிரம்பான் நகராண்மைக் கழக மண்டபம். |

**பொதுக்காலம் 34ஆம் ஞயிறு – கிறிஸ்து - அனைத்துலக அரசர் பெருவிழா**

தானி : 7: 13 - 14 தி.பா: 92: 1ab,1c, 2-5 தி.வெ: 1: 5 - 8 யோவான்: 18: 33b - 37

**"ஆண்டவர் ஆட்சி செய்கின்றார், மாட்சியை ஆடையாய் அணிந்துள்ளார்" - திபா 15**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 24 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித ஸ்டெனிஸ்லஸ்) | **எஸ். பி. எம் விவிலியக் கல்வி (SPM Bible Knowledge) :**<br>மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 25 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (புனித அந்தோணியார்)<br>திருப்பலி (ஆ) (புனித பிரான்சிஸ்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

## 2018 நவம்பர் (கார்த்திகை) மாத செய்திகள் / நிகழ்வுகள்

**1) பங்கு காணிக்கை:**

அ) 10/11 நவம்பர் 2018 ரிம:9,986.95 தித்தி ரிம: 91.00

ஆ) இயற்கைப் பேரிடருக்கான நிதிதிரட்டு: ரிம: 7,629.30

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**2) திருவழிபாட்டு பொருட்கள் விற்பனை:**

அ) 2019 திருவழிபாட்டு நாட்காட்டி(ஆ) ரிம:6.00 ஒன்றின் விலை

ஆ) 2019 விவிலிய நாட்குறிப்பு (ஆ) ரிம: 20.00 ஒன்றின் விலை

இ) வின்செண்ட் டி போல் இயக்கத்தினரின் 2019 ஆண்டு நாட்காட்டி ரிம:12/- வாங்கி ஆதரவு தரவும்.

**3) குழந்தைகளுக்கான திருமுழுக்கு அருளடையாளம்**

25/12/2018 (கிறிஸ்துபிறப்பு நாள்)

பதிவு மனுக்களை விரைவில் சமர்ப்பிக்கவும்.

**திருமண அருளடையாளக் கொண்டாட்டம்:**

ஆ) ஜோனதன் & ஸ்டெல்லா (24 நவம்பர் பகல் 3.30)

- ***ICCF (கிறிஸ்துவ சபைகளுக்கிடையிலான கிறிஸ்மஸ் ஒன்றுகூடல்)*** கிறிஸ்மஸ் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்வோம் 15-12-2018 மின் கோக் உணவகம். டிக்கெட்டுகள் திருப்பலிகளுக்குப் பின் விற்கப்படும்.
  தொடர்புக்கு: மார்ஜொரி: 018-395 0546
- **170 ஆம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்**: (கார்னர் ஸ்டோன் காஃபி டேபிள் புத்தகம்) ரிம:40.00 திருப்பலிகளுக்குப் பின்னும் அல்லது பங்கு அலுவலகத்திலும் வாங்கிக் கொள்ளலாம்.
- **ஆலய சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்காக** உங்களிடமிருந்து நிதியை வரவேற்கிறோம். உங்களுடைய காசோலைகளை Church of Visitation என்ற பெயரில் எழுதவும். உங்களுடைய ஆதரவுக்கு மிக்க நன்றி.
- **நம் பங்கு சிறுவர்களின் முதல் நற்கருணைக் கொண்டாட்டம்**: மொத்தம் 58 சிறுவர்கள் 25/11/2018 அந்தந்த மொழித் திருப்பலிகளில் பெற்றுக்கொள்வார்கள்: அவர்களை நம் செபங்களில் ஒப்புகொடுப்போம்.

இன்று திருப்பலியை வழி நடத்திய புனித அந்தோணியார் அதிச வினருக்கு நமது நன்றிகள்

- **சிறைச்சாலைப் பணிக்குழு:** ஆர்வத்தோடு பணி செய்ய இன்னும் தன்னார்வலர்கள அழைக்கிறோம். ஆர்வமுள்ளோர் உங்கள் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் 30-11-2018 க்கு முன் பதிந்து கொள்ளவும். தற்போது 13 தன்னார்வ ஊழியர்கள் மட்டுமே உள்ளனர். இவர்கள் அருட்திரு ஜோர்ஜ் அவர்களோடு சந்திக்க உள்ளனர். நாள்:25-11-2018 பகல் 3.00 இடம்; விவிலிய அறை.
- **புனித மேரி கிண்டர்கார்டன், ஜலான் லீ சாம்.** (சீனோ ஆங்கிலப் பள்ளி வளாகத்தில் உள்ளது) இப்போது பதிவு தொடங்கிவிட்டது. தொடர்புக்கு: மரினா 019-244 6143. ஆசீர்வதிப்பு மற்றும் அதிகாரப்பூர்வ திறப்பு: 16-12-2018 (ஞாயிறு)பகல் 3.00 மணி
- **வேற்றுமையில் ஒற்றுமை - 23-11-2018** (வெள்ளி) - மலேசிய சத்ய சாய் நிறுவனத்தோடு இணைந்து ஒற்றுமை அமைச்சகம், முதலமைச்சரின் அலுவலகம், மற்றும் அனைத்து சமயங்களுக்கிடையிலான உரையாடல் குழு இணைந்து நடத்துகிறது. நடத்துபவர்: மாண்புமிகு செனட்டார்: வேதமூர்த்தி - ஒற்றுமை மற்றும் சமுக ஒருங்கிணைப்புக்குழு அமைச்சர்
  நாள்:23-11-2018 (வெள்ளி) மாலை 6.30 -இரவு 10.00 வரை இடம்: சிரம்பான் நகராண்மைக் கழக மண்டபம். அனைவரையும் வரவேற்கிறோம். (குறிப்பு: ஒவ்வொரு வட்டாரத்தில் இருந்தும் (சோன்) குறைந்த 20 நபர்கள் பங்கைப் பிரதி நிதிக்க வேண்டும். அதிச / சோன் பொறுப்பாளர்கள் இதைக் கவனத்தில் கொள்ளவும். அருட்திரு: ஜோர்ஜ் & சேவியர்
- **கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி (CCC)** - இந்த உலகில் நான் ஒரு தூதுரை (EG 273) அனைத்து மறைக்கல்வி ஆசிரியர்கள், கிபுமுவ ஆசிரியர்கள், நற்கருணைப் பணியாளர்கள், அதிச பொறுப்பாளர்கள் மற்றும் பங்கு மக்கள் அனைவரும் இதில் கலந்துகொள்ள அழைக்கிறோம். உரை வழங்குபவர்: டாக்டர் ஸ்டீவன் செல்வராஜு (இயகுனர் API, K.L) நாள்: 24-11-2018(சனி) காலை 9.00 - 4.00 வரை. தொடர்பு: அந்தோனி பரம் (012-662 0949)
- **சமுகத்தில் ஆன்மீக அனுபவம்:** அனைத்து அதிச பொறுப்பாளர் மற்றும் அவருடைய குழுவினர் அனைவரையும் அழைக்கிறோம் நாள்:01-12-2018 காலை 8.30 - மாலை 5.00 வரை. பெயர்களை அதிச / சோன் அளவில் பதிந்து கொள்ளலாம். அல்லது திருப்பலிகளுக்குப் பின் பதிந்து கொள்ளலாம்.

- **கிறிஸ்மஸ் கோத்தோங் ரோயோங்- ஒன்றிணைந்து ஆண்டவரின் இல்லத்தை தூய்மைப்படுத்துவோம்.** 20-11-2018 (பொது விடுமுறை) காலை 9.00 மணி. துப்புரவு செய்யத் தேவையான பொருட்களை உடன் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- **அதிச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்(BECCOT) 28-11-2018 (புதன்) இரவு 8.00 மணி.** மினவுதல் தேவாலய மண்டபம் அனைத்து அதிச/சோன் பொறுப்பாளர்கள் தவறாமல் கலந்துகொள்ளவும்
- **திருவருகைக் கால ஒப்புரவு அருளடையாளம்.**

| | | |
|---|---|---|
| 26 நவம்பர் (திங்கள்) | மாலை 7.00 மணி : | மினவுதல் தேவாலயம், சிரம்பான் |
| 27 நவம்பர் ( செவ்வாய்) | இரவு 8.00 மணி: | புனித திரேசா ஆலயம், நீலாய் |
| 28 நவம்பர் ( புதன் ) | இரவு 8.00 மணி: | புனித இரட்சகர் ஆலயம், கிள்ளான் |
| 29 நவம்பர் ( வியாழன்) | இரவு 8.00 மணி: | புனித யோசேப்பு ஆலயம், செந்தூல் |
| 30 நவம்பர் ( வெள்ளி) | இரவு 8.00 மணி: | புனித இக்னேஷியஸ், பெட்டாலிங் ஜெயா |